vikatan.com NAANAYAM VIKATAN VOLUME: 19 ISSUE: 10

₹30

நாணயம் விகடன்

பணத்தைப் பெருக்கும் தாரக மந்திரம்

4.2.24

உங்கள் முதலீட்டில் தங்கத்துக்கு ஏன் முக்கியத்துவம் தர வேண்டும்?

வீடு, மனை... 'ப்ரீ லான்ச் புக்கிங்...' குறைவான விலையா, சிக்கலான வலையா?

பாசிட்டிவ்-நெகட்டிவ் டிப்ஸ்

மலிவு விலை சந்தை... சீனாவிலிருந்து என்னென்ன பொருள்களை வாங்கலாம்..?

சீனாவில் இருந்து எலெக்ட்ரானிக்ஸ் பொருள்களை நம் நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கு நமது மத்திய அரசாங்கம் தொடர்ந்து பல தடைகளை விதித்து வருகிறது. சீனாவில் இருந்து பலவிதமான பொருள்களை இறக்குமதி செய்வதைத் தடுத்தால் மட்டுமே, நம் நாட்டில் உற்பத்தித் துறை வளர்ச்சி அடையும் என மத்திய அரசாங்கம் எதிர்பார்க்கிறது. தவிர, பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்து தருவதற்கு சீனாவைப்போல இன்னொரு நாடும் அவசியம் வேண்டும் எனப் பல்வேறு உலக நாடுகளும் நினைத்து, சீனாவுக்குத் தர வேண்டிய ஆர்டர்களை பல்வேறு உலக நாடுகளுக்குத் தந்து வருகின்றன. இதனால், இந்தியா உட்பட பல நாடுகளில் உற்பத்தித் துறையில் பல புதிய மாற்றங்கள் உருவாகி உள்ளதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

உலகத் தொழிற்சாலை...

என்றாலும், இன்றைய தேதியில் உலகில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதில் முன்னணியில் உள்ள நாடு சீனா மட்டுமே. கடந்த 2022-ம் ஆண்டில் சீனா, உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்த மொத்த வர்த்தக மதிப்பு 3.50 டிரில்லியன் அமெரிக்க டாலர் ஆகும்.

2022-ல் நம் மொத்த இறக்குமதி 732 பில்லியன் டாலர். இதில் 102 பில்லியன் அளவுக்கு அதாவது, 14% சீனாவில் இருந்து இறக்குமதி ஆகியுள்ளது!

சீனாவை 'உலக வர்த்தகத்தின் தொழிற்சாலை' என்றே அழைக்கிறார்கள். ஆப்பிள் நிறுவனம் தொடங்கி, 1873-ல் தொடங்கப்பட்ட பழைமையான கோஹ்லர் சானிட்டரிவேர் (Kohler sanitaryware) கம்பெனி வரை சீனாவில் உற்பத்தித் தொழிற்சாலை இல்லாத பன்னாட்டு நிறுவனங்களே இல்லை. இதற்குக் காரணங்கள் பலவாறாக இருந்தாலும், மிக முக்கியமான விஷயம் என்பது அந்நாட்டின் பயிற்றுவிக்கப் பட்ட திறமையான தொழிலாளர்களே!

வித்தியாசமான சீனச் சந்தை...

சீன வியாபாரச் சந்தையானது ஞாயிறு உட்பட வாரத்தின் ஏழு நாள்களும் சரியாக காலை 9 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணி வரை இயங்கும். அவர்கள் ஆண்டுக்கு இருமுறை மட்டுமே ஓய்வு எடுக்கிறார்கள். அதாவது, சீனப் புத்தாண்டுக் காலத்தில் 2 முதல் 3 வாரங்களும் (பிப்ரவரி), தேசிய தினத்தில் (அக்டோபர்) பத்து நாள்களுமே சீனா முழுக்க அனைத்துக் கடைகளும் மூடப்பட்டிருக்கும்.

அங்கு அரசாங்கம் கட்டி எழுப்பியுள்ள உள்நாட்டுக் கட்டமைப்பு

ரஹீம் இயாஸ்,
ஏற்றுமதி-இறக்குமதி பயிற்சியாளர், https://www.riitexportlead.com/



மிக அலாதியானது. 1970-களிலேயே ஆள் இல்லாத இடங்களுக்கும் நெடுஞ்சாலை அமைத்துவிட்டார்கள். 1974-ல் ஹாங்காங்குக்கு வர்த்தகப் பயணம் சென்ற பலரும் இதைப் பார்த்து ஆச்சர்யப்பட்டார்கள். இன்றைக்கு சீனாவில் இருக்கும் சாலைவசதி இன்னும் பல மடங்கு உயர்ந்து ஆச்சர்யத்தில் ஆழ்த்துகிறது.

சீனாவில் இருந்து அதிக இறக்குமதி...

கடந்த 2022-ல் இந்தியாவின் மொத்த இறக்குமதி 732 பில்லியன் டாலர். இதில் 102 பில்லியன் அளவுக்கு அதாவது, 14% பொருள்களை சீனாவில் இருந்து இறக்குமதி செய்திருக்கிறோம். இதற்கு என்ன காரணம்?

சீனாவில் தயாராகும் பொருள்களின் விலை இந்தியாவில் தயாராகும் பொருள்களின் விலையைவிட மிகவும் குறைவு. காரணம், சீனாவில் உற்பத்திச் செலவு குறைவு; நம் நாட்டில் உற்பத்திச் செலவு அதிகம்.

சீனாவில் தொழில் நிறுவனங்களுக்கு வங்கிகள் வசூலிக்கும் வட்டி விகிதம் 0% - 2.50% வரை மட்டுமே. ஆனால், இந்தியாவில் வட்டி விகிதம் சராசரியாக 10% முதல் 18% வரை உள்ளது. சீனாவில் நவீனமயமான இயந்திரங்களை அவர்களே தயாரித்து, அதன் மூலம் உற்பத்தியும் நடக்கிறது. உலக அளவில் பெருமளவில் பொருள்களைத் தயார் செய்து ஏற்றுமதி செய்வதால், குறைந்த விலையில் பொருள்களை சீனாவால் விற்க முடிகிறது.

சீனாவில் தடையில்லா மின்சாரம் மிக குறைந்தக் கட்டணத்தில் வழங்கப்படுகிறது. மேலும், தொழிலாளர்களை 'Hire and Fire' முறையில் எப்போது வேண்டுமானாலும் வேலைக்குச் சேர்க்கலாம்; வேலையில் இருந்து எடுத்து வீட்டுக்கு அனுப்பலாம். (இதெல்லாம் இந்தியாவில் நடக்க வாய்ப்பே இல்லை!) இவையெல்லாம் சீனாவின் வெற்றிக்கு மிக முக்கியமான காரணிகளாகப் பார்க்கப்படுகிறது.

b91fb687-60d1-4452-b5cb-2f7efaa4f17c

மீண்டும் உயரும் இறக்குமதி..!

இந்திய - சீன நாடுகளின் கடந்த 5 ஆண்டுக் கால வர்த்தக அளவை கொஞ்சம் கவனித்துப் பார்த்தால், கோவிட் காலம் தவிர்த்து, சீனாவில் இருந்து இந்திய இறக்குமதி அதிகரித்து வருவது தெரியும். 2018-ல் 73 பில்லியன் டாலர், 2019-ல் 68 பில்லியன் டாலர், 2020-ல் 58 பில்லியன் டாலர் என மூன்று ஆண்டுகளுக்குக் குறைந்தாலும், 2021-ல் 87 பில்லியன் டாலர், 2022-ல் 102 பில்லியன் டாலர் என மீண்டும் உயர்ந்து வருகிறது. ஆனால், இந்தியா தன் மொத்த ஏற்றுமதியில் 3.30% பொருள்களை மட்டுமே சீனாவுக்கு அனுப்புகிறது. இதில் முக்கியமானவை தாதுக்கள், கசடு மற்றும் சாம்பல் (55%), உப்பு, கந்தகம், மண் மற்றும் கல்; பிளாஸ்டெரிங் பொருள்கள், சுண்ணாம்பு மற்றும் சிமென்ட் (41%), தானியங்கள் (5%), விலங்குகள் மற்றும் காய்கறி, கொழுப்பு மற்றும் எண்ணெய் வகைகள் (36%) ஆகும்.

சீனாவை நம்பி இருக்கும் இந்தியா...

இந்தியா ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்குத் தேவையான அத்தியாவசியமான மூலப் பொருள்கள் சீனாவில் இருந்தே பெறப்படுகிறது. உதாரணமாக, இந்திய மோட்டார் சைக்கிளில் பொருத்தப்படும் 'அலாய் வீல்' அதன் தரத்துக் காகவும், குறைந்த விலைக்காகவும் சீனாவில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. மின்சார வாகனங்களில் பொருத்தப்படும் பேட்டரியைத் தயாரிக்கும் முன்னணி நிறுவனங்களில் முக்கியமானவை சீன நிறுவனங்கள்தான். வாகன உற்பத்திக்குத் தேவையான பெரும்பாலான உதிரிபாகங்களை, சீனாவில் இருந்தே இந்தியா இறக்குமதி செய்கிறது. எலெக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலைகள், SKD (Semi Knocked Down) மற்றும் CKD (Completely Knocked Down) என்னும் தயாரிப்புப் பொருள் களை வியட்நாம், அமெரிக்கா, கொரியா, சிங்கப்பூர், ஜப்பான், ஜெர்மனி, மலேசியா, தாய்லாந்து உள்ளிட்ட நாடுகள் சீனாவில் இருந்தே இறக்குமதி செய்கின்றன.

இறக்குமதியான 5,775 பொருள்கள்...

இந்தியா கடந்த 2022-ல் சீனாவில் இருந்து சுமார் 5,775 வகையான பொருள்களை இறக்குமதி செய்துள்ளது. இதில் பெருவாரியான அளவு சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் மின்சார இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதியில் சீனாவின் பங்களிப்பு 44% ஆக உள்ளது. இதர முக்கிய பொருள்களில் சீனாவின் பங்களிப்பு விவரம் வருமாறு: ரசாயனம் (45%), பிளாஸ்டிக் பொருள்கள் (24%), உரங்கள் (14%), ஒளியியல், புகைப்படம் மற்றும் ஒளிப்பதிவு பொருள்கள் (19%), இரும்பு எஃகு பொருள்கள் (39%), தோல் பதனிடுதல் மற்றும் சாயமிடும் சாதனங்கள் (34%), கண்ணாடிப் பொருள்கள் (50%), மரச் சாமான்கள்; படுக்கை மெத்தைகள் (50%), காகிதம் மற்றும் காகித அட்டை (23%), கட்லரி, கரண்டி (37%), பீங்கான் பொருள்கள் (56%), காலணிகள் (38%), தோல் பொருள்கள், கைப்பைகள் (53%), பொம்மை பொருள்கள், விளையாட்டு பொருள்கள் மற்றும் அதன் உதிரிபாகங்கள் (61%), கடிகாரம் மற்றும் அதன் பாகங்கள் (13%), அச்சு தொழில் உபகரணங்கள் (12%), தரைவிரிப்புகள் மற்றும் பிற ஜவுளி தரை உறைகள் (24%), குடைகள் மற்றும் வாக்கிங் ஸ்டிக்ஸ் (94%), இசைக் கருவிகள் (49%), தலைக்கவசம் மற்றும் அதன் பாகங்கள் (63%) முதலிய பொருள்களை சீனாவிலிருந்து இந்தியா இறக்குமதி செய்துள்ளது.

சீனாவில் இறக்குமதி செய்வது எப்படி?

சீனாவிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டும் எனில், என்னென்ன விஷயங்களைக் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும் எனப் பார்ப்போம்.

சீனாவிலிருந்து பொருள் களை இறக்குமதி செய்ய வேண்டும் எனில், அதற்கு முதலில் உங்களிடம் ஏற்றுமதி, இறக்குமதி லைசென்ஸ் இருப்பது அவசியம்.

சீனாவில் இருந்து நீங்கள் எந்தப் பொருள்களை இறக்குமதி செய்ய விரும்புகிறீர்களோ, அந்தப் பொருளின் உள்நாட்டு சந்தை மதிப்பை சரியாகக் கணக்கிட்ட பிறகே அதை இறக்குமதி செய்யும் முடிவை எடுக்க வேண்டும். குறைந்த விலையில் பொருள்கள் கிடைக்கிறது என்று இறக்குமதி செய்து விட்டு, அந்தப் பொருளை நம் நாட்டில் யாருமே வாங்க வில்லை எனில், நஷ்டமே வரும் என்பதால், பொருள் தேர்வில் கவனமாக இருக்க வேண்டும்.



இறக்குமதி செய்யும்போது, இந்திய அரசுக்கு சுங்க வரிகள் மற்றும் ஐ.ஜி.எஸ்.டி (IGST) செலுத்தியே பொருள்களைப் பெற முடியும். அப்படி இறக்குமதி செய்யும்போது முழு கன்டெய்னரில் மாத்திரமே இறக்குமதி செய்ய வேண்டும் என்று கட்டாயம் இல்லை; மாறாக, LCL (Lesser than a Container Load) மூலம் குறைவான சரக்குகளைக்கூட இறக்குமதி செய்யலாம்.

பொதுவாக, பெரிய வர்த்தகர்கள் சீனாவுக்கே நேரடியாகச் சென்று, பொருள்களைத் தேர்வு செய்து இறக்குமதி செய்வார்கள். அங்கு செல்வதற்கான உகந்த தருணம், வருடத்தில் ஏப்ரல் & அக்டோபர் மாதம் ஆகும். இந்த மாதங்களில்தான், ஒவ்வொரு வருடமும் சீனாவின் மிகப் பெரிய வர்த்தக கண்காட்சியான 'CANTON FAIR' நடக்கும். சீனாவில் உள்ள முன்னணி நிறுவனங்கள் அனைத்தும் இந்தக் கண்காட்சியில் கலந்து கொள்ளும். இது மூன்று கட்டங்களாக பொருள்கள் வாரியாகப் பிரிக்கப்பட்டு நடக்கும். இதில் கலந்துகொள்வதன் மூலம் உங்களுக்குத் தேவையான பொருள்களை, தொழிற்சாலை உரிமையாளர்களை நேரிலேயே சந்தித்து, விலை பேசி இறக்குமதி செய்யலாம்.

இந்தக் கண்காட்சிக்குச் செல்ல மத்திய அரசின் ஃபியோ அமைப்பு (Federation of Indian Export Organisations - FIEO) வழி காட்டுகிறது.

சீனாவிலிருந்து சிறிய அளவில் நீங்கள் பொருள்களை வாங்கி விற்க விரும்பினால், உங்களுக்குத் தேவையான பொருள்களை அலிபாபா நிறுவனத்தின் வலைதளம் மூலமாகவோ (www.alibaba.com), சீன வர்த்தகத்தில் ஈடுபடும் பிற நிறுவனங்களின் மூலமாகவோ வாங்கலாம். இதில் முக்கியமான விஷயம் என்னவெனில், நீங்கள் சீனத் தொழிற்சாலைக்கு முன்பணம் அனுப்பும்முன், மிகக் கவனமாக அந்த நிறுவனத்தைப் பற்றி நன்கு விசாரித்துத் தெரிந்துகொண்ட பின்னரே, பணம் அனுப்ப வேண்டும். பணம் தந்துவிட்டு, பொருள் வரவில்லையே என்று புலம்பும் நிலையை நாம் உருவாக்கிக்கொள்ளக் கூடாது!

பட்டாசு போன்ற பொருள்களை சீனாவில் இருந்து இறக்குமதி செய்யத் தடை, லேப்டாப் போன்ற எலெக்ட்ரானிக்ஸ் பொருளை சீனாவில் இருந்து இறக்குமதி செய்யத் தடை எனப் பல தடைகள் வந்தாலும், சீனாவில் இருந்து எல்லாப் பொருள்களையும் இறக்குமதி செய்வதை இப்போதைக்கு தடை செய்ய சாத்தியம் இல்லை என்றே தோன்றுகிறது. இன்றைய நிலையில், இந்திய அரசாங்கம் அனுமதித்துள்ள, அதே சமயம், மக்களுக்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்து வியாபாரம் செய்யலாமே!